**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 2 /2023**

**Deposition of P.W.2- பிளஸ்சின் ஜெபராஜ்**

**Dated: 12.09.2025**

**<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்தவர் எனது உறவினர் இல்லை. இறந்து போனவர் எனது தாத்தா என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா ஸ்டீபன் மாணிக்கம் புகார் கொடுத்த நபர் என்று சொன்னால் சரிதான். 1வது எதிர்மனுதாரர் ேஹாண்டா டியோ வாகனத்தை ஓட்டி வந்தார். வாகனத்தின் எந்த இடத்தில் லாறி மோதியது என்று நான் பாக்கவில்லை. குற்ற வழக்கில் போலீசார் என்னை விசாரித்தார்கள். குற்ற வழக்கில் என்னை சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளார்கள். நான் விபத்தை சரியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. லாறியின் வலது பின்பக்க டயர் இறந்தவர் மீது ஏறியது என்றால் சரியல்ல, இடது பின்பக்க டயர் தான் ஏறியது. லாறியை முந்தி செல்ல முயன்ற போது எதிரே கார் வந்ததால் வலது பக்க பின் டயரில்மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்து போனவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல இறந்துபோனவர் எனது உறவினர் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 2 /2023**

**Deposition of P.W.3- ஜெபராஜ்**

**Dated: 12.09.2025**

**<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன நபரை எப்படி தெரியும் என்றால் வாகனம் இடிக்கும் போது நான் பேக்கரி முன்பு இருந்து பார்த்தேன். இவ்வழக்கு நடைபெறும் விபரத்தை போலீசார் சொல்லி தெரியும். குற்ற வழக்கில் போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்தை நான் பார்க்கவில்லை என்றும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனமும், லாறியும் நேருக்கு நேர் மோதிவிட்டது. லாறி சாமியார்மடத்திலிருந்து – மார்த்தாண்டம் நோக்கி வந்தது– இருசக்கர வாகனம் மார்த்தாண்டத்திலிருந்து – சாமியார்மடம் நோக்கி வந்தது. லாறி தாறுமாறாக வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது. லாறியின் பின் வலது பக்க டயர் இறந்தவர் மீது ஏறியது என்றால் சரிதான். இருசக்கர வாகனம் லாறியை முந்தி செல்ல முயன்ற போது எதிரே கார் வந்ததால் இருசக்கர வாகனம் லாறியின் பின்பக்க டயரில் மோரி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்தவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்தவர் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சிய்ம அளிக்கிறேன் என்றால் சரியல்ல.